அசல் வழக்கு எண். 50/2021 வா.சா.1 பாஸ்கரன் த/எபெ பெருமாள்

**<u>24.06.2024 குறுக்கு விசாரணை</u>**

1. 1ம்வாதி ராஜேஸ்வரிஅம்மாள் என் அக்கா ஆவார். 1ம் வாதி சென்னையில் உள்ளார். 2ம் வாதி மோகன் இரும்பேட்டில்உள்ளார். 4ம் வாதி பார்த்தசாரதி சென்னையில் வேலை செய்து வருகிறார். 1ம் பிரதிவாதி சந்திரன் என் அண்ணன். ஆவா 2ம் பிரதிவாதி விஜயா 1ம் பிரதிவாதியின் மனைவி ஆவார்.

2.இந்த வழக்கில் 1,2, மற்றும் 4ம் வாதிகள் சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் எனக்கு தெரியாது. 1ம் வாதி மருத்துவமனையில் உள்ளார். வாதிகள் எங்கள் நால்வருக்கும் இடையே கருத்து வேறுபாடு உள்ளதா என்றால் இல்லை. என்அப்பா பெயா பெருமாள் அவர் 1994ல் இறந்துவிட்டார்.

3. என்அப்பா பெருமாளின் சகோதரிகளான பெரியதாய் அம்மாள், அம்மா கண்ணம்மாள் ஆகியோரை நான் பார்த்துள்ளேனா என்றால் பெரியதாய் அம்மாளை நான் பார்த்து இல்லை. தற்போது அம்மாகண்ணம்மாளும் உயிருடன் இல்லை. பெரியதாய் அம்மாளை கஸ்தம்பாடியில் திருமணம்செய்து கொடுத்தார்கள்என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அம்மா கண்ணம்மாளை வண்ணாங்குளத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள்என்றால் சரிதான்.

4 பெரியதாயி அம்மாள் மற்றும் அம்மாகண்ணம்மாள் ஆகியோரின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா பெருமாள் விவசாயம் செய்து வந்தார். அதில் வரும் காய்கறிகளை வைத்து வியாபாரம் செய்து வந்தார் மேலும் மளிகை கடையும் வைத்திருந்தார்.

5. என்அப்பா பெருமாளின் அப்பா பெயா கரியன் ஆகும். கரியனுக்கு சொத்துக்கள் ஏதாவது இருந்ததா என்றால் இல்லை. 1951ல் வழக்கு சொத்து கிரயம் வாங்கப்பட்டபிறகு தான் என் அப்பா அந்த சொத்தில் விவசாயம் செய்தார்.

6. நான் தாவாவிலும் முதல் விசாரரண வாக்குமுலத்தில் என் அப்பாவிவசாயம் செய்தது வியாபாரம் செய்தது அதில் வந்த வருமானம் ஆகியவை குறித்து எந்த ஒரு தகவலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் அப்பா என்அப்பாவுடன்பிறந்த சகோதரிகள் பெரியதாயி அம்மாள் மற்றும் அம்மாகண்ணம்மாள ஆகியோர் எந்தவேலையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. 14.07.1951 தேதியிட்ட வா.சா.ஆ.1ஆவணத்தின்போது நான்பிறந்து இருந்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 சம்மந்தப்பட்ட சொத்து எந்த வருமானத்தை கொண்டு எவ்வாறு வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்அப்பா மற்றும் அவருடைய சகோதரிகள் பெரிய தாயி அம்மாள் மற்றும் அம்மாகண்ணம்மாள் ஆகியோர் எந்த வருமானத்தை வைத்து வா.சா.ஆ.1 ஆவண சொத்தினை கிரயம் பெற்றார்கள் என்று எனக்கு தெரியாது.

8. என்அப்பாவுடன் பிறந்த சகோதரிகளுக்கு திருமணம் செய்தபிறகு அம்மா கண்ணம்மாள் அவரது கணவருடன் சேர்ந்து வாழாமல் என் அப்பாவுடன் இருந்து வந்தார். பெரிய தாயி அம்மாள் அவருடைய கணவர் வீட்டில் வாழ்ந்து வந்தார். வா.சா.ஆ.1 முன்னிலைக்கு என் அப்பா பெரிய தாயி அம்மாள் மற்றும் அம்மா கண்ணம்மாள் ஆகியோர் வாங்கிய சொத்தானது பொது கூட்டுக்குடும்ப சொத்து என்றால் சரிதான்.

9. என்அப்பா  பெரியதாயி அம்மாள் மற்றும் அம்மாகண்ணம்மாள் வா.சா.ஆ.1 முன்னிலைக்கு சொத்தினை பத்திர முன்னிலைக்கு பாகம் பிரித்து கொண்டார்களா என்றால் இல்லை. தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது.

10. என் அப்பா தாவா 4ம் அயிட்ட சொத்தை தனது சகோதரி அம்மாகண்ணம்மாளுக்கு கிரயம் எழுதி வைத்ததற்கு ஆதாரமாக அதற்குரிய கிரய பத்திரம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு என்அப்பா தாவா 4ம் அயிட்ட சொத்தை அம்மாகண்ணம்மாளுக்கு கிரயம் எழுதிக்கொடுத்ததை நான்  தாவாவிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தில்  அம்மாகண்ணம்மாள் தான் தனியாக கிரயம் வாங்கி அனுபவித்து வந்த தாவா 4வது அயிட்ட சொத்தினை ராஜேஸ்வரிஅம்மாளுக்கு கிரயம் கொடுத்தாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால்  இல்லை.  அதனால் தாவா 4வது அயிட்ட சொத்தினை  அம்மாகண்ணம்மாள பொது கூட்டுக்குடும்ப சொத்திலிருந்து தான் ராஜேஸ்வரி அம்மாளுக்கு கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான்.  அதனால் வா.சா.ஆ3 கிரய பத்திர முன்னிலைக்கு  ராஜேஸ்வரி அம்மாள் 4வது அயிட்ட சொத்தினை தனது தனிப்பட்ட சொத்து என்று உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

( வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)